# முற்றம் பராமரிப்பு, தெருக்களில் வாகனம் நிறுத்துதல், மற்றும் இரைச்சல்: இந்த வசந்த பருவத்தில் ப்ராம்ப்ட்டன் நகரை பசுமையானதாக, சுகாதாரமானதாக மற்றும் பாதுகாப்பானதாக ஆக்க நகரவாசிகளுக்கு நகர நிர்வாகம் நினைவூட்டுகிறது

ப்ராம்ப்ட்டன், ON (மே4, 2021) – தூய்மையான மற்றும் பாதுகாப்பான நகரமாக பேணுவதில் உதவுவதற்காக ஆண்டு முழுவதும் உப-சட்டங்களைப் பின்பற்றுவதன் முக்கியத்துவத்தை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் குடியிருப்பாளர்களுக்கு நினைவூட்டுகிறது. இந்த தரங்களை நிலைநிறுத்துவதில் ஒவ்வொரு குடியிருப்பாளருக்கும் ஒரு பங்கு உள்ளது.

இந்த வசந்த காலத்தில், உங்கள் பங்களிப்பைக் கொடுத்து, மதிப்புமிக்க அண்டை விட்டுக்காரராக இருங்கள். குடியிருப்பாளர்கள் பின்வரும் உப சட்டங்களை மனதில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்:

- உங்கள் முற்றத்தைப் பராமரிக்கவும். உங்கள் காலி இடத்தில் முளைத்திருக்கும் புல் ஒரு கால்பந்து பந்தை விட உயரமாக இருந்தால், அதை வெட்ட வேண்டிய நேரம் இதுவேயாகும். புற்களும் களைகளும் அவ்வப்போது வெட்டபட வேண்டும், கிளிப்பிங் அகற்றப்பட்டு, அவை அதிகபட்சமாக 20 சென்டிமீட்டர் உயரத்திற்கு மேல் இல்லை என்பதையும் உறுதிப்படுத்த வேண்டும்.
- பக்கவாட்டு நடைபாதைகளில் இடையூறுகளை அகற்றவும். வாகனங்கள் நடைபாதைக்குள்ளாக நீட்டிக்கொண்டிருந்தால், அவை மற்றவர்களுக்கு ஒரு தடையாக இருக்கக்கூடும், மேலும் நடைபாதைகள் பாதுகாப்பற்றதாகிவிடும்.
- நகரத்தின் போக்குவரத்து மற்றும் வாகனம் நிறுத்தலுக்கான உப சட்டத்தின் கீழாக, அதிகாலை 2 முதல் 6 மணி வரையிலோ அல்லது ஒரே நேரத்தில் மூன்று மணி நேரத்திற்கு மேலாகவோ, வாகனங்கள் தெருவில் நிறுத்தப்படக்கூடாது. ஒவ்வொரு காலண்டர் ஆண்டிலும், வாகன உரிமத் தகடு ஒன்றுக்கு 14 நாட்கள் வரை தெருக்களில் வாகனங்களை நிறுத்துவதற்கான கோரிக்கைகளை நகர நிர்வாகம் ஏற்றுக்கொள்கிறது. இப்படியான வாகன நிறுத்த சலுகைகளின்படி, வாகனங்கள் மூன்று மணி நேரத்திற்கும் மேலாகவும் மற்றும் / அல்லது அதிகாலை 2 முதல் 6 மணி என்ற நேர வரம்புக்கு அப்பாலும் வாகனத்தை நிறுத்த அனுமதிக்கிறது. பொழுதுபோக்கு பயன்பாட்டிற்காக

என்று வடிவமைக்கப்பட்ட மிகப்பெரிய வாகனங்களையும் தெருவில் நிறுத்த இது அனுமதிக்கிறது. வாகன நிறுத்த சலுகைகளுக்கான பரிசீலனைகளை இங்கே வேண்டிப் பெறலாம்.

- குடியிருப்பாளர்கள் பாதுகாப்பாக வெளியில் அதிக நேரம் செலவிடுவதால், அதிக சத்தத்தைக் குறைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். நகரத்தின் இரைச்சல் உபசட்டம், கீழாக, பிற ப்ராம்ப்ட்டன் குடியிருப்பாளர்களை தொந்தரவு செய்யக்கூடிய சத்தங்களை உருவாக்க, உண்டாக்க, ஏற்படுத்த, அல்லது அனுமதிக்க காரணமாக இருக்க யாருக்கும் அனுமதி இல்லை.

நகரின் உப சட்டங்கள் பற்றிய மேலும் தகவல்களுக்கு வருகை புரியவும் www.brampton.ca

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca